1970 செப்டம்பர் 1]

கோவை மாவட்டத்தில் நீரூற்றுகள்

* 170 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர், தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தானாகப் பீரிடும் நீர் ஊற்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் தமது பதிலில் 'இல்லை' என்று பதில் சொன்னார்கள். இனிமேலாவது அதற்கான முயற்சி எடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏற்கனவே, தென் ஆற்காடு, திருச்சி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் எளிதில் நீர் ஊற்றுக்கள் கிடைக்கும் இடங்களில் கூட போடப்பட்ட கிணறுகள் வெற்றிகரமாக நடைபெறவில்லை. சமீபத்தில் கூட வரட்சி நிவாரண நிதியிலிருந்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து அவைகளை ரிப்பேர் செய்தும் மீண்டும் ஆழப்படுத்தியும் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, கோவையில் இருக்கிற நீரூற்றுகளை எடுக்கும் திட்டம் தற்சமயம் இல்லை.

Russian tractors

* 171 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether a number of Russian tractors have been procured by the Tamil Nadu Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) ஆம்.

டிராக்டர் வாடகைத் திட்டத்தின் கீழ் வாடகைக்கு விட தற்போது வேளாண்மைத் துறையிடம் 45 ரஷ்ய நாட்டுப் பல் சக்கர டிராக்டர்களும், சக்கர வகை டிராக்டர்கள் இரண்டும் உள்ளன.

இவை தவிர, தமிழ் நாடு வேளாண்மைத் தொழில் கழகம் மூலம் வழங்கப்படுவதற்காக அரசு வாணிபக் கழகம் 350 ரஷ்ய நாட்டு டிராக்டர்களை ஒதுக்கியுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த ரஷ்ய டிராக்டர்களின் விலை என்ன? மேலும், அரசு இந்த வருடத்தில் இந்த ரஷ்யன் டிராக்டர்களை வாங்க இருக்கிறதா? அப்படி வாங்கப்படும் டிராக்டர்களை தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் வழங்குகிறதா அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வழங்கும் எண்ணம் உள்ளதா?